(4) The Madras Agricultural Produce Markets (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 19 of 1965).

The Hon. Sri P. KAKKAN : Sir, I move—

"That the Madras Agricultural Produce Markets (Amendment) Bill,[a] 1965 (L.A. Bill No. 19 of 1965), be taken into consideration."

இப்போது வேளாண்மை விளைபொருள் சந்தைக் குழுக்கள், 1959-ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் சந்தைச் சட்டத்தின் கீழும் (தமிழ்நாடு சட்டம் 23/1959) அதன் கீழ் இயற்றியுள்ள விதிகளின் கீழும் முறைப்படுத்தப்படுகின்றன. மேற்படி சட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்டுள்ள பகுதி ஒவ்வொன்றிலும் நிறுவியுள்ள சந்தைக் குழுக்கள் உறுப்பினர் தேர்தல்களை மேற்படி சட்டத்தின் 8-வது பிரிவில் சொல்லியிருக்கிற விதமாக நடத்த வேண்டும். மேற்சொன்ன அறிவிப்புப் பகுதி ஒரு ரெவின்யூ மாவட்டத்தைப் போன்றதாகும். 8-வது பிரிவின் (2) உட்பிரிவிற்கிணங்க சந்தைக்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் தொகுதிகள் இரண்டு வகைப்பட்டவையாகும். அதாவது, (1) அறிவிப்புப்பகுதியில் அறிக்கையிட்டுள்ள வேளாண்மை விளைபொருள் சம்பந்தமான உற்பத்தியாளர்கள், (2) அறிக்கையிடப்பட்ட விளைபொருள் சம்பந்தமாக மேற்சொன்ன அறிவிப்புப் பகுதியில் 6-வது பிரிவின் (1)வது உட்பிரிவின்கீழ் லைசென்ஸ் பெற்று இருப்பவர்கள் என்று இருவகைப்பட்ட வாக்காளர் தொகுதிகள் இருக்கின்றன. 8-வது பிரிவின் (3)வது உட்பிரிவிற்கிணங்க, அறிக்கையிடப்பட்ட விளைபொருள் உற்பத்தியாளர்கள் தங்களுக்குள் ஒன்பது பேரைத் தேர்ந்தெடுக்கவேண்டும். 6-வது பிரிவின் (1)வது உட்பிரிவின்கீழ் லைசென்ஸ் பெற்று இருப்பவர்கள் தங்களுக்குள் நான்கு பேரை இச்சந்தைக் குழுக்களுக்கு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதாவது இச்சந்தைக் குழுக்களுக்கு நடக்கும் உறுப்பினர் தேர்தல்களை அறிக்கையிடப்பட்ட பகுதி முழுவதிலும் ஒரே தேர்தல் தொகுதியாக கருதி நடத்த வேண்டும். இத்தேர்தலில் உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகளும் லைசென்ஸ்தாரர்களின் பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்தல் அபேட்சகர்களுக்கும் அவர்களைத் தேர்ந்தெடுக்கும் மக்களுக்கும் இந்தேர்தல்முறை மிகச் சிரமமாகவும் அசௌகரியமாகவும், இருக்கிறது என்றும், உற்பத்தியாளர்களுக்கோ லைசென்ஸ் தாரர்களுக்கோ அந்த அந்தப் பகுதிகளுக்கிணங்க நியாயமான முறையில் பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை என்றும் அரசாங்கத்துக்குப் பல முறையீடுகள் வந்துள்ளன. சமனற்ற இந்த நிலையைப் போக்குவதற்காக அறிவிப்புப் பகுதியை உற்பத்தியாளர்களின் தொகுதிகளாகவும் லைசென்ஸ் தாரர்களின் தொகுதிகளாகவும் தேவையான எண்ணிக்கைக்கு வரையறுக்கும் வகையில், சட்டத்தைத் திருத்துவது அவசியமெனக் கருதப்படுகிறது. இத்தொகுதிகள் ஒன்றையொன்று அடுத்திருப்பதுடன் சிறியனவாகவும் இருக்கும். மற்றும், இத்தொகுதிகள் ஒவ்வொன்றிலிருந்தும் ஓர் அங்கத்தினர் தேர்ந்

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 3rd August 1956.

தெடுக்கப்படுவார். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மேற்படிச் சட்டத்தின் 8-வது பிரிவையும், 29-வது பிரிவையும் திருத்த உத்தேசிக்கப்படுகிறது. மேற்படி சட்டத்தின்கீழ் இயற்றப்படும் விதிகளை தமிழ்நாடு அரசாங்க இதழில் வெளியிடுவதற்கும் அந்த விதிகளையும், சட்டத்தின்கீழ் வெளியாகும் அறிவிப்பையும் விதிகள் துணைக்குழுவின் பரிவுரைக்கிணங்க, சட்டப்பேரவையின் இரு மன்றங்களின் முன் வைப்பதற்கும், மேற்சொன்ன சட்டத்தில் தேவையான ஷரத்துக்களை இயற்றுவதற்கு இந்தவாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

எனவே, இம்மசோதாவை இம்மன்றம் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : Motion moved :—

"That the Madras Agricultural Produce Markets (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 19 of 1965), be taken into consideration."

* SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr Speaker, I would like to say a few words on the Bill which is before the House for consideration. It is now stated that territorial constituencies would be demarcated for electing members to the market committees from ryots. Now, in certain districts groundnut and chillies have been notified. There is a proposal to notify paddy also as a commodity coming under the Agricultural Produce Markets Act. When 'paddy' is also to be noticed, I think most of the entire taluk will become an electoral body and they may have to elect the Committees. That would become unwidely. In the interest of the rural population and agricultural population, we have to consider, when we are having elections to societies, panchayats and legislature, to have election for this also. I think it would be better, if instead of elections the system of nomination of some is introduced. Otherwise, all the rural folk will have to come to the polls and elect their representatives to these committees. That aspect may be considered because "Paddy" is also going to be notified as a commodity under the Act. Some other alternative form of choosing members for these Market Committees may be considered for sometime.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே, அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவை நாங்கள் வரவேற்கிறோம். இப்பொழுது இருக்கின்ற முறையைக் கைவிட்டு நாமினேஷன் முறையை கைவிட்டு, தொகுதி வாரியாக, உற்பத்தியாளர்களையும், வியாபாரிகளையும் அடிப்படையாகக் கொண்டு தேர்தல் முறை இருக்கவேண்டும் என்று திருத்தம் கொண்டு வந்திருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். ஏனென்றால், நாமினேஷன் செய்வதில் அங்கத்தினர்கள் தங்கள் காரியங்களைச் செய்து கொள்ளுவதில் குறிப்பாக இருக்கிறார்கள். மார்க்கெட்டிங் கமிட்டியிலே லைசென்ஸ் பெற்று வியாபாரிகள் ஒன்று சேர்ந்துகொண்டு

மணிலா வாங்குவதை இந்த விலைக்குத்தான் என்று கட்டுப்பாடு செய்து, 'கார்ட்டல் சிஸ்டம்' பார்ம் செய்து விடுகிறார்கள். ஆகவே, தேர்தல் என்று வைத்தால், வியாபாரிகளும், பொதுமக்களும், உற்பத்தியாளர்களும் இருப்பார்கள். அவர்கள் சேர்ந்து ஒப்பந்தம் செய்து கொண்டு விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாமல் ஒரு முறையை வகுத்துக் கொள்ள முடியும்.

கனம் அங்கத்தினர் திரு. சிரஞ்சீவுலு நாயுடு சொன்னார்கள், தேர்தலை ஒத்திப் போடவேண்டும் என்று. இப்பொழுது சர்க்கார் விவசாயிகளுக்கு நன்மை வரவேண்டும், கஷ்டம் வராமல் இருக்கவேண்டும் என்று செய்கிறார்கள். ஆகவே தேர்தல் முறையே சிறந்தது என்று வெளிப்படையாகச் சொல்லி, இதை வரவேற்று விடை பெற்றுக் கொள்ளுகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்த மசோதாவை மனப் பூர்வமாக வரவேற்றதற்காக அவர்களுக்கு என்னுடைய நன்றி, உணவுப் பயிர்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களுக்கும், சமுதாயத்திற்கு நன்மை செய்யவேண்டும் என்று வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கும் இந்த மார்க்கெட்டிங் கமிட்டியில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்று பரிசிலனை செய்து இந்த ஏற்பாடு செய்திருக்கிறோம். ஒவ்வொரு ஜில்லாவிலும் பொதுவாக எடுத்து சில பேர்களை அங்கம் வகிக்கச் செய்தோம். அதில் புகார் வந்ததால், சட்டம் கொண்டு வரவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. தேர்தல் முறையை நிறுத்தி வைக்க வேண்டும் என்று கனம் உறுப்பினர் திரு. சிரஞ்சீவுலு நாயுடு சொன்னார்கள். அதை நான் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்று வருந்துகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்த மசோதாவை சபை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is :—

"That the Madras Agricultural Produce Markets (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 19 of 1965) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

10-30 p.m. Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI P. KAKKAN. Sir, I move—

"That the Madras Agricultural Produce Markets (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 19 of 1965), be passed.

10-31 a. m. The motion was put and carried and the Bill was passed."

MR. SPEAKER : The House will now adjourn *sine die*.

The House then adjourned *sine die*.